**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 197/2024**

**16.04.2026**

**D.W.1- ஆசைக்கனி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தை எனது அத்தையிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி அசல் பத்திரத்தை வாதியின் கணவர் கருத்தப்பாண்டியிடம் கொடுத்தேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் மாரியம்மாளுக்கு ஈடுகடன் பத்திரம் 2019ல் எழுதிக்கொடுத்தேன் என்றால் அவரது கணவருக்கு எழுதிக்கொடுத்தேன். வாதியை தற்போது தான் பார்த்தேன். 05.08.2019ல் வாதியிடம் ரூ.4 லட்சம் கடன் வாங்கிக்கொண்டு வாதிக்கு ஈடுகடன் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். 2022ல் ரூ.2,50,000க்கு மேல்ஈடுப்பத்திரம் ஒன்றை வாதிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். ஆனால் ரூ.2,26,000க்கு தான் எழுதிக்கொடுத்தேன். பணம் கையில் வாங்கவில்லை, வட்டிக்காக எழுதிக்கொடுத்தேன். நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். ஆவணங்களை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். வழக்கிற்காக எதிர்வழக்குரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

**Sd/-P.S.Ruskin Raj,**
**Sub Judge,**
**Usilampatti.**